1993 ஏப்ரல் 13]

பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளியாக மாற்றிவிட்டால் ஆண்கள் படிப்பதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்கு என்று இரண்டு பள்ளிகள் உள்ளன. பெண்களுக்கு என்று அரியலூர் தொகுதியிலே இதுவரையிலும் எந்தப் பள்ளியும் இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பகுதியில் ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி அமைக்க முடியுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 323, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

323—

போக்கம்பாளையத்திலுள்ள திரு. மோகன் குமாரமங்கலம் இல்லத்தில் கிளை நூலகம்

**11334 டாக்டர் வெ. சரோஜா—*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் திரு. மோகன் குமாரமங்கலம் அளித்த இல்லத்தில் ஒரு கிளை நூலகத்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சங்ககிரி தொகுதி எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் மக்கள் தொகை 800 ஆக இருப்பதால் அங்கு கிளை நூலகம் திறக்க இயலாது. இருப்பினும் பகுதிநேர நூலகம் திறப்பதற்கான நிபந்தனைகளை அவ்வூர்ப் பொது மக்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனத்தார் நிறைவேற்றித் தந்தால் அவ்வூரில் பகுதிநேர நூலகம் திறக்கப்படும்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட எலச்சிப்பாளையம் ஒன்றியம், போக்கம்பாளையம் கிராமத்தில் மத்திய அமைச்சர் அவர்கள் உயர்திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுடைய தந்தையார் உயர்திரு மோகன் குமாரமங்கலம் அவர்கள் வாழ்ந்த அந்த மாளிகையை அரசுக்கு ஒப்படைத்து விட்டதாக அறிகிறேன். ஒப்படைக்கப்பட்ட அந்தக் கட்டிடம் மேலும்

பராமரிக்கப்படும் வண்ணமும், போக்கம்பாளையம் மட்டுமின்றி, அதைச் சுற்றியுள்ள 10 கிராம மக்களும் மாணவ சமுதாயமும் பயனடையும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நடப்பாண்டிலேயாவது அதனைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மோகன் குமாரமங்கலம் அவர்களுடைய இல்லமானது உள்ளாட்சித்துறையினிடம் தரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கட்டுப்பாட்டில் அந்த வீடு இருக்கின்றது. அதை பகுதிநேர நூலகமாகத் திறப்பதற்கான நிபந்தனைகள்படி அதை ஒப்படைத்து, அதற்குத் தேவையான உறுப்பினர்களைச் சேர்த்துத் தரவேண்டும். அதே போல தளவாடங்களைத் தரவேண்டும். காலி மனை தரவேண்டும் என்கின்ற இந்த நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்வார்களே யானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஓரளவுக்கு நிறைவேற்றமுடியும், ஒரு பகுதிநேர நூலகத்தையாவது திறக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 324, உறுப்பினர் திரு. எஸ்.ஆர். ஜெயராமன் இருக்கையில் இல்லை. அவர் சார்பில் திரு. கே. கந்தசாமி கேட்கிறார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

324—

சேலம் நகரில் மாவட்ட சித்த மருத்துவமனை ஏற்படுத்தல்.

9526 திரு. எஸ்.ஆர். ஜெயராமன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகரில் இருபத்தைந்து படுக்கை வசதியுடன் கூடிய மாவட்ட சித்த மருத்துவமனை ஏற்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசினர் மருத்துவமனை சேலம் மாவட்ட மக்களுக்கு மட்டுமல்லாமல் தர்மபுரி மாவட்ட மக்களுக்கும் கூட பயன்படுகின்றது. இப்போது